## தஞ்சாவூர் மாவட்ட அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள்.

*** 119 வினா :—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் 1968 நவம்பர் மூன்றாவது வாரத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தார்களா ?

(இ) அந்தச் சந்திப்பின் விளைவாக எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) ஆடுதுறை 27 குறுவை நெல்லுக்கு 64·5 சதவீதம் அரிசி கொடுக்கப்படவேண்டுமென்று நிர்ணயித்த ஆணை, 64 சதவீதம் அரிசி அரசுக்கு கொடுத்தால் போதுமென்று மாற்றப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தஞ்சை மாவட்டம் உள்பட பல்வேறு மாவட்ட அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் அரசுக்குக் கொடுக்க வேண்டிய அரிசியைக் கொடுக்காமல் அதிக விலைக்கு விற்றிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள்மீது தீவிரமான நடவடிக்கை எடுப்பார்களா ? இன்னமும் கணக்கு முடிக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 64 சதவீதம் அரிசி கொடுக்க வேண்டுமென்று ஆணை போட்டிருக்கிறோம். அதற்குக் குறைவாகக் கொடுக்கிறபோது அப்போதே 1-க்கு 1½ மடங்கு 'பெனல்டி' அபராதம் போட்டு வசூலிக்கிறோம். இன்னமும் கணக்குகள் முடியவில்லை என்பது உண்மைதான். விரைவில் கணக்குகள் முடிக்கப்பட்டு எவ்வளவு பணம் அரசுக்கு வரவேண்டுமோ அதை வாங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** கண்டிரோல் இருக்கும்போது இந்த அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் 64 சதவீதம் அரிசி கொடுக்க வேண்டுமென்று நெல்லை ஊற வைத்து, ஊறவைத்து நாற்றம் அடிக்கின்ற நிலையில் அரிசி கொடுத்தார்கள். கண்டிரோல் நீங்கிவிட்டது. நீங்கியும் கூட அந்த மாதிரியான நாற்றம் அடிக்கின்ற அரிசிதான் இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரிசியின் தரத்தைச் சோதிக்க க்வாலிடி ஆபீசர் என்று போட்டிருக்கிறோம். தரக்குறைவாக இருக்குமானால் 1 சதவீதம் 'கட்' போடுகிறோம். அதையும் வசூல் செய்கிறோம்.

**திரு. டி. மார்டின் :** 64·5 சதவீதம் என்று இருந்ததை 64 சதவீதம் என்று குறைத்ததால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, எற்கனவே பாக்கியிருக்கிற மில்களுக்கு இந்த ஆண்டு அரைவைக்கு நெல் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவை அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அது பற்றி தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். அம்மாதிரியான ஆணை எதையும் அரசு பிறப்பிக்கவில்லை.